இந்திய அரசு
இந்திய வானிலை ஆய்வு துறை
மண்டல வானிலை ஆய்வு மையம்
6, கல்லூரி சாலை, சென்னை – 600006
தொலைபேசி : 044- 28271951

GOVERNMENT OF INDIA
INDIA METEOROLOGICAL DEPARTMENT
**Regional Meteorological Centre**
**New No. 6, College Road, Chennai–600 006**
**Phone: 044- 28271951**

# வானிலை தகவல்

**தேதி: 13.05.2021** **நேரம்: 0330 மணி**

**விதர்பா முதல் தென் தமிழகம் வரை, 0.9 கிலோமீட்டர் உயரத்தில் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக**

**13.05.2021:** மேற்கு தொடர்ச்சி மலை ஒட்டிய மாவட்டங்கள், தென் தமிழக மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதி, தருமபுரி, சேலம், கிருஷ்ணகிரி, ஈரோடு, திருப்பூர், மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய இலேசானது முதல் மிதமான மழையும், நீலகிரி, **கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கன மழையும் பெய்யக்கூடும்**. **ஏனைய மாவட்டங்கள் மற்றும் புதுவை பகுதிகளில் பெரும்பாலும் வறண்ட வானிலையே நிலவும்.**

**14.05.2021: அரபிக் கடலில் புதியதாக உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக, தேனீ, திண்டுக்கல், கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி** மாவட்டங்கள், கன்னியாகுமாரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, **மற்றும்** ராமநாதபுரம் **மாவட்டங்களில், ஓரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் சூறை காற்றுடன் (30 முதல் 40 கிலோமீட்டர் வேகத்தில்) கூடிய கன முதல் மிக கன மழையும், ஏனைய மாவட்டங்கள் மற்றும் புதுவை பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழையும் பெய்யக்கூடும்.**

**15.05.2021: அரபிக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு பகுதி, தாழ்வு மண்டலமாக உருவாவதன்காரணமாக,தேனீ, திண்டுக்கல், கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களின் மலை** பகுதிகளில் **ஓரிரு இடங்களில் அதி கன மழையும், மேற்கு தொடர்ச்சி மலை ஒட்டிய மாவட்டங்கள்,** தென் கடலோர மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் **ஓரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் சூறை காற்றுடன் (30 முதல் 40 கிலோமீட்டர் வேகத்தில்) கூடிய கன முதல் மிக கன மழையும், ஏனைய மாவட்டங்கள்** மற்றும் புதுவை பகுதிகளில் **அநேக இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழையும் பெய்யக்கூடும்.**

**16.05.2021: மேற்கு தொடர்ச்சி மலை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னல் காற்றுடன் (30 முதல் 40 கிலோமீட்டர் வேகத்தில்) கூடிய கன முதல் மிக கன மழையும், ஏனைய மாவட்டங்கள்** மற்றும் காரைக்கால், புதுவை பகுதிகளில் **பெரும்பாலான இடங்களில் இடி மின்னலுடன் கூடிய** இலேசானது முதல் **மிதமான மழையும் பெய்யக்கூடும்.**

**17.05.2021: மேற்கு தொடர்ச்சி மலை ஒட்டிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னல் கூடிய கன மழையும், ஏனைய மாவட்டங்கள்** மற்றும் காரைக்கால், புதுவை பகுதிகளில் **அநேக இடங்களில் இடி மின்னலுடன் கூடிய** இலேசானது முதல் **மிதமான மழையும் பெய்யக்கூடும்**

**சென்னையை பொறுத்தவரை அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 36 மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 28 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கும். நகரின் ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய** இலேசானது முதல் **மிதமான மழையும் பெய்யக்கூடும்.**

**கடந்த 24 மணி நேரத்தில் மழை அளவு (சென்டிமீட்டரில்):**

**பரூர் (கிருஷ்ணகிரி) 5, சித்தார் (கன்னியாகுமாரி) 4, உத்தமபாளையம் (தேனீ),கடம்பூர் (தூத்துக்குடி), சிவலோகம் (கன்னியாகுமாரி) தலா 3, அருப்புக்கோட்டை (விருதுநகர்), இல்லயங்குடி (சிவகங்கை), வேம்பகோட்டை (விருதுநகர்), பாப்பிரெட்டிப்பட்டி (தர்மபுரி), ஏற்காடு (சேலம்) தலா 2, பெரியார் (தேனீ), பேச்சிப்பாறை (கன்னியாகுமாரி), தர்மபுரி (தர்மபுரி), குடியாத்தம்**

**(வேலூர்), பெருஞ்சாணி அணைக்கட்டு (கன்னியாகுமாரி), ஓமலூர் (சேலம் ), தளி (கிருஷ்ணகிரி), குழித்துறை (கன்னியாகுமாரி), பாலக்கோடு (தர்மபுரி), புதான் அணைக்கட்டு (கன்னியாகுமாரி ) தலா 1.**

**மீனவர்களுக்கான எச்சரிக்கை :**

**தென் கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய லட்சத்தீவு பகுதிகளில் புதிய காற்றழுத்த தாழ்வு உருவாகிவுள்ளதன் காரணமாக**

**13-05-2021: குமரிக்கடல், தென் கிழக்கு அரபிக்கடல், லட்சத்தீவு மற்றும் மாலத்தீவு பகுதிகளில் சூறாவளி காற்று மணிக்கு 45-55 கிலோமீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.**
**தென்மேற்கு அரபிக்கடல் பகுதிகளில் சூறாவளி காற்று மணிக்கு 40-50 கிலோமீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.**

**14.05.2021: காற்றழுத்த தாழ்வு பகுதி காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுபெறக்கூடும் இதன் காரணமாக குமரிக்கடல் பகுதி, லட்சத்தீவு, மாலத்தீவு, தென் கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் சூறாவளி காற்று மணிக்கு 45-55 கிலோமீட்டர் வேகத்திலும் இடைஇடையே 65 கிலோமீட்டர் வேகத்திலும் வீசக்கூடும் வீசக்கூடும்.**
**தென்மேற்கு அரபிக்கடல் பகுதிகளில் சூறாவளி காற்று மணிக்கு 40-50 கிலோமீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.**

**15.05.2021,16.05.2021: காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக வலுபெறக்கூடும் இதன் காரணமாக**
**குமரிக்கடல் பகுதி, லட்சத்தீவு, மாலத்தீவு, தென்மேற்கு அரபிக்கடல் தென் கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் சூறாவளி காற்று மணிக்கு 50-60 கிலோமீட்டர் வேகத்திலும் இடைஇடையே 70 கிலோமீட்டர் வேகத்திலும் வீசக்கூடும் வீசக்கூடும்.**

மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாமென அறியுறுத்தப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு: imdchennai.gov.in இணையதளத்தை காணவும்.

**முனைவர் நா. புவியரசன்**
**இயக்குனர்**
**சென்னை வானிலை ஆய்வு மையம்.**

சென்னை வானிலை ஆ...

**01.03.2021 முதல் 13.05.2021 வரை பெய்த மழை அளவு**

| மாவட்டம் | பதிவான மழை (மி.மீ) | இயல்பு மழை (மி.மீ) | வேறுபாடு (%) |
|---|---|---|---|
| அரியலூர் | 28.3 | 66.0 | -57 |
| செங்கல்பட்டு | 16.0 | 39.2 | -59 |
| சென்னை | 26.0 | 37.9 | -32 |
| கோயம்புத்தூர் | 103.5 | 115.7 | -11 |
| கடலூர் | 11.1 | 59.4 | -81 |
| தர்மபுரி | 72.8 | 101.9 | -29 |
| திண்டுக்கல் | 107.2 | 126.7 | -15 |
| ஈரோடு | 122.5 | 94.3 | 30 |
| கள்ளக்குறிச்சி | 0.2 | 54.5 | -99 |
| காஞ்சிபுரம் | 23.0 | 50.0 | -54 |
| கன்னியாகுமரி | 204.9 | 199.8 | 3 |
| காரைக்கால் | 11.0 | 74.0 | -85 |
| கரூர் | 22.3 | 71.3 | -69 |
| கிருஷ்ணகிரி | 54.2 | 84.7 | -36 |
| மதுரை | 70.3 | 111.1 | -37 |
| நாகப்பட்டினம் | 35.5 | 77.2 | -54 |
| நாமக்கல் | 65.3 | 95.1 | -31 |
| நீலகிரி | 167.8 | 148.8 | 13 |
| பெரம்பலூர் | 31.0 | 53.7 | -42 |
| புதுச்சேரி | 3.7 | 75.1 | -95 |
| புதுக்கோட்டை | 24.6 | 61.6 | -60 |
| ராமநாதபுரம் | 51.8 | 96.7 | -46 |
| ராணிப்பேட்டை | 41.3 | 46.1 | -10 |
| சேலம் | 67.0 | 100.7 | -33 |
| சிவகங்கை | 68.3 | 91.9 | -26 |
| தஞ்சாவூர் | 29.6 | 76.2 | -61 |
| தேனி | 146.4 | 138.2 | 6 |
| தென்காசி | 175.0 | 163.6 | 7 |
| திருநெல்வேலி | 77.2 | 118.6 | -35 |
| திருப்பத்தூர் | 45.2 | 67.2 | -33 |
| திருப்பூர் | 75.5 | 87.1 | -13 |
| திருவள்ளூர் | 19.8 | 43.5 | -55 |
| திருவண்ணாமலை | 17.9 | 62.5 | -71 |
| திருவாரூர் | 55.0 | 75.7 | -27 |
| தூத்துக்குடி | 71.4 | 103.6 | -31 |
| திருச்சிராப்பள்ளி | 24.6 | 63.3 | -61 |
| வேலூர் | 42.0 | 59.8 | -30 |
| விழுப்புரம் | 4.2 | 39.6 | -89 |
| விருதுநகர் | 139.1 | 119.9 | 16 |